# உடுபத்தாவ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடுபத்தாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் ஏட்டுப் பெறுமதி ரூபா 145,000 இற்கான தட்டச்சுக்கள், குப்பை வண்டிகள், ரோனியோ இயந்திரங்கள் மற்றும் நீர் பம்புகள் ஆகியவற்றின் பெறுமதியும் அடங்கியிருந்ததுடன் நாட்குறிப்பு இலக்கம் 103 இன் மூலம் உலர் மருந்துகள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ஆகிய ரூபா 300,000 இற்கான செலவும் மூலதனச் செலவுகளுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளவாறான பதவியணிக் கடன் மீதி ரூபா 6,144,634 ஆக காணப்பட்ட போதிலும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 4,675,440 தொகை என ரூபா 1,469,194 குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக இறுதி மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்த 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய துணைப்பதிவேடுகள் இடையே ரூபா 819,566 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

-----------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 30,648,782 ஆகும். அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 1.6 ஆகிய ரூபா 482,538 தொகை ஒன்று 03 வருடங்களுக்கு மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 15,164,407 ஆகும். அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 5.1 ஆகிய ரூபா 781,371 தொகை 3 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,604,104 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

02. நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 6,475,444 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 7,046,158 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 570,714 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. இந்த செற்பாட்டு விளைவிற்கு ரூபா 16,525,439 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 17,462,156 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டு தொடர்பான நிதி விளைவு ரூபா 5,538,727 இற்கான மிகையாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 49,378,606 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 71.9 தொகை என ரூபா 35,549,373 வும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 16,525,439 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களினால் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 42,903,162 தொகையில் அண்மித்த நூற்றிற்கு 68.33 என ரூபா 29,313,960 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் அண்மித்த நூற்றிற்கு 77.67 என ரூபா 22,768,648 இற்கான சம்பள மீளளிப்பு உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைக்கப்பெற்ற வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல் மூலதனச் செலவு ஆகிய ரூபா 17,462,156 தொகையில் அண்மிய நூற்றிற்கு 41.80 என ரூபா 7,299,750 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் மீதியான நூற்றிற்கு 58.20 ஆகிய ரூபா 10,162,406 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடக்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

------------------------------

வாடகை

-------------

குறைந்த விலைகூறல் ரூபா 263,988 இற்கான 06 இறைச்சிக் கடைகளும் குறைந்த விலைகூறல் ரூபா 39,545 இற்கான 07 மீன் கடைகள் மற்றும் குறைந்த விலைகூறல் ரூபா 27,106 இற்கான 06 தென்னை விளைச்சல்கள் என்பன மீளாய்வாண்டு தொடர்பாக வாடகைக் கொடுக்க முடியாதிருந்தது.

2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத் தொகை ரூபா 193,373 ஆக காணப்பட்டதுடன் முத்திரைக் கட்டண தொகை ரூபா 14,059,304 உம் ஆகும்.

03. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிமஹுன பன்றி இறைச்சிக் கடையை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 123,810 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் மேலதிக கிரயமொன்று மேற்கொண்டு வழக்குத் தாக்கல் செய்வதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக் கோப்பு 82 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாறான ஆளணிக் கோப்பு 90 ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தேறிய மிகை 8 ஆக காணப்பட்டது. அவை 05 பதவி பெயர்களின் கீழ் 17 மிகையாகவும் 07 பதவிப் பெயர்களின் கீழ் பற்றாக்குறை 09 உம் காணப்பட்டது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------

(அ) 2014 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 10,178,880 தொகை பெறுமதியான இரண்டு வாகனங்களுக்கான பதிவு செய்தல் காப்புறுதி சான்றிதழ் மற்றும் வருமான அனுமதிப்பத்திரம் என்பன 2015 மே மாதம் வரை பெற்றிருக்காமையால் ஓட்டத்தில் ஈடுபடுத்தாமல் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

(ஆ) 2012 மார்ச் மாதத்தில் உற்பத்தியை ஆரம்பித்த சபையின் கொங்கிரீட் அச்சுக் கற்கள் செயற்திட்டத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 12 திகதியின் பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக அவற்றிற்கான இயந்திரங்கள் மற்றும் கட்டடங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது என 2014 அக்டோபர் 18 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்